06.03.2026.
O.S.No. 357/2021

பிவா. சா. 1 ஜெகநாதன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

தாவாச்சொத்து என் தகப்பனார் பச்சைமுத்துசேர்வைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு நான், முதல் பிரதிவாதி, 1ம் வாதி, வெள்ளையம்மாள் ஆகிய நான்கு மக்கள் என்றால் சரிதான். வாரிசு அடிப்படையில் எங்கள் நான்குபேருக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்தில் தற்போது நானும், என் அண்ணனும், வாதிகளும் அனுபவித்து வருகிறோம் என்றால் நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். தாவாச்சொத்தைப்பொறுத்து நானும் 1ம் பிரதிவாதியும் கடந்த 03.01.1995ம் தேதி ஒரு பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகபத்திரத்தில் 1ம் வாதியையும் இறந்துபோன வெள்ளையம்மாள் என்பவரையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் பூர்வீகச்சொத்து என்று சொல்லித்தான் பதிவு செய்தோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் எந்த விதத்திலும் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிவாசாஆ.1 திருஉளசீட்டு 1985ல் போடப்பட்டுள்ளது. மேற்படி திருஉளசீட்டுபற்றி பாகப்பிரிவினை பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ.1ல் லேட் வெள்ளையம்மாளைப்பற்றியும் 1ம் வாதியைப்பற்றியும் சொல்லவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ.1ல் கிராமத்தின் பெயர் தவறுதலாக எழுதப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ.1 திருஉளசீட்டை இந்து முறைப்படி எழுதமுடியாது என்றால் சரிதான். தாவாச்சொத்துக்களை நானும் 1ம் பிரதிவாதியும் பிரித்துக்கொள்ளுமாறு என் தகப்பனார் சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ.1 இவ்வழக்கிற்காக உற்பத்தி

செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிவாசாஆ.1 உண்மையான இருந்திருக்குமேயானால் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும்நிரூபண வாக்குமூலத்திலும் பாகப்பிரிவினை பத்திரத்திலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ.1 பொய்யான ஆவணம் என்பதால்தான் அதுபற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன வெள்ளையம்மாள் எனது அக்காள். அவரது திருமணத்தின்போது நான் பிறந்துவிட்டேன். என் அக்காவின் திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம்தான். நான் இந்து வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். என் அக்கா வெள்ளையம்மாள் திருமணம் செய்தநபர் மறவர் இனத்தைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். வெள்ளையம்மாளின் திருமணம் காதல் திருமணம் என்றும் அத்திருமணத்திற்கு நாங்கள் சம்மதிக்காததால் அவராக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. 1ம் வாதிக்கும் வெள்ளையம்மாளுக்கும் தகுந்த வீடு கட்டிக்கொடுத்தது பற்றி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்தில் வாதிகளுக்கும் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தாவாச்சொத்தில் 2/4 பங்கு மட்டுமே உள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA — Digitally signed by A MUTHUSARATHA Date: 2026.03.06 17:13:24 +0530

Principal District Judge,
Dindigul.